ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2117/48 - 2019 අප්‍රේල් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.04

*2117/48 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம், இதனகத்துக்குப் பின்னர் வந்துள்ள அட்டவணை I இன் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீது அறவிடத்தக்க அல்லது திரட்டப்படத்தக்க உற்பத்தி தீர்வையானது, 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் ஏற்புடமையாக்கப்படக் கூடிய வகையில் அட்டவணை I இன் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விகிதத்தில் செலுத்தப்படுதல் வேண்டுமென பிரகடனப்படுத்துகிறேன்.*

*இக்கட்டளைக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தும் அத்தகைய விசேட தீர்வையினைச் செலுத்தி தனது மோட்டார் வாகனங்களை விடுவிப்பதற்கு விரும்புகின்ற எவரேனும் இறக்குமதியாளரொருவர் அல்லது தனி நபரொருவர் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் கீழுள்ள அரசிறைக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு இக்கட்டளைக்கு II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு தனது விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, மாச்சு 29.*

1A - PG 4493 — 567 (2019/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை I**

| *விபரம்*<br>*I* | *உற்பத்தித் தீர்வை*<br>*II* |
|---|---|
| *1.* 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கைத் துறைமுகத்தில் (அம்பாந்தோட்டை) சுங்க விடுவிப்பிற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள மோட்டார் வாகனங்களை இறக்குமதியாளர்களுக்கு விடுவித்தல் வேண்டும் :<br><br>(i) தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதியாளர் அல்லது தனிநபர் ஒருவரின் பெயரில் திறக்கப்பட்ட நாணயக் கடித(ங்களை) த்தினை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட குறித்த வாகனங்கள் அல்லது<br><br>(ii) தனிப்பட்ட பாவனைக்காக அத்தகைய வாகன இறக்குமதியின் பேரில் ஏதேனும் உத்தியோகபூர்வ வழிமுறை(கள்) (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்கள்) ஊடாக குறித்த அங்கீகாரம் பெற்ற முகவர்/ இறக்குமதியாளருக்குத் தேவையான பணத்தினைச் செலுத்தியுள்ள அடையாளங் காணப்பட்ட வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் பேரில் எவரேனும் அதிகாரம்பெற்ற முகவர்/மோட்டார் வாகன இறக்குமதியாளர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட குறித்த மோட்டார் வாகனங்கள்<br><br>*2.* இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்தான நான்கு (04) மாதக் காலப்பகுதியினுள் இவ்வறிவித்தலிலுள்ள அட்டவணை I இன் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உற்பத்தித் தீர்வையினைச் செலுத்துவதன் பேரில் இலங்கை சுங்கத்திலிருந்து அத்தகைய மோட்டார் வாகனத்தினை/ வாகனங்களை விடுவிப்பதற்கு அதிகாரமளிப்பதற்காக அனைத்து உத்தியோகபூர்வ/முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் பொதுத் திறைசேரியின் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இவ்வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறாக, மேலே பட்டியலிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள எவரேனும் இறக்குமதியாளரொருவர் அல்லது தனிப்பட்ட நபரொருவர் தனது விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>*3.* உத்தேச சலுகைத் திட்டத்தின் கீழ் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட, அனைத்து மோட்டார் வாகனங்களும் இலங்கைச் சுங்கத்திலிருந்து அத்தகைய மோட்டார் வாகனங்கள் விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் மேலே இல. 1 இல் மேற்கோள்காட்டப்பட்ட தனி நபர்களின் பெயர்களில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் பதிவுசெய்யப்படாத ஏதேனுமொரு மோட்டார் வாகனம் மீது அத்தகைய மோட்டார் வாகனங்கள் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுகையில் ஏற்புடைமையான உற்பத்தி வரியினைச் செலுத்துவதற்கு பொறுப்புடமையாக்கப்படுதல் வேண்டும். | சம்பந்தப்பட்ட நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகையில் ஏற்புடைமையாகக் காணப்பட்ட உற்பத்தித் தீர்வை விகிதம். |

## அட்டவணை II

**2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மோட்டார் வாகனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி வரித் திருத்தங்கள் காரணமாக அகற்றப்படாது அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் வாகனங்களை அகற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தல் இல. .................... உள்ளவாறாக செலுத்தத்தக்க விசேட தீர்வையினைக் கோருவதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :

   முகவரி :

   தொலைபேசி இல. :

2. வாகன உரிமையாளரின் பெயர் :

   முகவரி :

   தொலைபேசி இல. :

   தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. வாகன இறக்குமதிக்கான நோக்கம் : தனிப்பட்ட பாவனை/வர்த்தகம்

4. நாணயக் கடித மேற்கோள் இல. :

   நாணயக் கடிதம் தாபிக்கப்பட்ட வங்கி :

   நாணயக் கடிதம் தாபிக்கப்பட்ட திகதி :

   நாணயக் கடிதத்தின் பெறுமதி (ரூபா) :

   வாகனம் இலங்கையில் தரை இறக்கப் பட்ட திகதி :

   வார்நாம இல. :

   வர்த்தக விலைப்பட்டியல் இல. :

5. வாகன வகை :

எரிபொருள் வகை : (பெற்றோல்/டீசல்/ ஹைபிரிட் பெற்றோல் அல்லது டீசல்/ மின்சாரம்)

இயந்திரக் கொள்ளளவு/இயந்திரத்தின் மின்பிறப்பாக்கி கொள்ளளவு

அடிச்சட்டக இல. :

இயந்திரத்தின் இல. :

உற்பத்தி நாடு :

கி. கா. கே. (CIF) பெறுமதி :

இ. மு. குறியீடு :

6. வாகன இறக்குமதியாளர் அல்லது முகவரொருவர் மூலமாக வாகனம் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் :

வாகன இறக்குமதியாளரின் பெயர் :

முகவரி :

தொலைபேசி இல. :

தேசிய அடையாள அட்டை இல. :

வாகன இறக்குமதிக்கான ஆரம்ப கொடுப்பனவுப் பெறுமதி மற்றும் திகதி :

கட்டணை முறைமை :

செலுத்திய கட்டணம் (ரூபா) :

சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்கள் :

பெயர் : ............................

தே. அ. அ. இல. : ............................

திகதி : ............................

விண்ணப்பதாரர் கையொப்பம் : ............................

சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள ஆவணங்கள் :

1. நா. க. இன் பிரதி
2. வா. நா. இன் பிரதி
3. வர்த்தக விலைப்பட்டியலின் பிரதி

} நாணயக் கடிதம் திறக்கப்பட்டுள்ள வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டவை

4. அ. கொ. தி./ப. நா. அவர்களினால் திருப்தியடையும் வகையில் குறித்த வாகன இறக்குமதியோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்குமாக அதே வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதியாளரின் வங்கிக் கணக்கு விபரம்/வங்கிக் கூற்றுக்கள் (உ-ம் : குறித்த வாகன உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட பணம், நாணயக் கடிதக் கட்டணம் முதலியன)
5. அ. கொ. தி./ப. நா. அவர்களினால் திருப்தியடையும் வகையில் குறித்த வாகன உரிமையாளரோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்குமாக அதே வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதியாளரின் வங்கிக் கணக்கு விபரம்/வங்கிக் கூற்றுக்கள்
6. வாகன இறக்குமதியாளரின் தே. அ. அ. இன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி
7. குறித்த வாகன உரிமையாளரின் தே. அ. அ. இன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி
8. தனிப்பட்ட பாவனைக்காக மாத்திரம் வாகனம் இறக்குமதி செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டு வாகன உரிமையாளரிடமிருந்து அல்லது வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட சத்தியக்கடதாசி
9. குறிப்பீடு செய்யப்பட்ட நபரொருவரின் தனிப்பட்ட பாவனைக்காக மாத்திரம் வாகனம் இறக்குமதி செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டு வாகன இறக்குமதியாளரிடமிருந்து அல்லது முகவரிடமிருந்து பெறப்பட்ட சத்தியக் கடதாசி
10. வாகன இறக்குமதியாளர் அல்லது முகவரின் வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
11. வாகன இறக்குமதியாளர் அல்லது முகவரின் வரி அடையாள இல.
12. அ. கொ. தி./ப. நா. அவர்களினால் திருப்திப்படும் வகையில் அவரால் வேண்டப்படுகின்ற பிற ஆவணங்கள்

***குறிப்பு***.- தே. அ. அ. - தேசிய அடையாள அட்டை

நா. க. - நாணயக் கடிதம்

வா. நா. - வார்நாமம்

அ. கொ. தி./ப. நா. - அரசிறைக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம்

*05 - 83*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.